சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 19.04.2023 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | அரசன் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

அ.சா.5

---

முதல் விசாரணை

நான் கம்பம் தாத்தப்பன்குளம் தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.03.2018ம் தேதி காலை 6.00 மணியளவில் நான் மதுரை செல்வதற்காக கம்பம் பேருந்து நிலையத்தில் காத்திருந்தபோது அப்போது சுதாகர் என்பவரை கூடலூர் போலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சுதாகருக்கும் சுகந்திக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாகவும், அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து குள்ளப்பகவுண்டன்பட்டியைச் சேர்ந்த சாமி என்பவரை சுலோ பாய்சன் மருந்து கொடுத்து கொல்ல முயன்றதாக சொல்லி கொண்டிருந்தார்கள். சுகந்தியின் கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், ரூ.10,000ம் கொடுத்து கொலை செய்து விடலாம் என்று எண்ணியிருந்ததாகவும், பின்னர் மருந்து மூலம் கொலை செய்துவிடலாம் என்று எண்ணி அவர்கள் செயல்பட்டதாக சொன்னார். அவர் சொன்னதை போலிசார் வாக்குமூலமாக என் முன்னிலையில் எழுதிக்கொண்டிருந்தார்கள். அப்போது vivo மொபைல் போன் ஒன்றை சுதாகரிடமிருந்து போலிசார் கைப்பற்றினார்கள். அப்போது அதை நாங்கள் பார்த்ததினால் என்னிடமும் லோகநாதனிடமும் சாட்சியாக கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் vivo மொபைல் என் முன்னிலையில் போலிசார் கைப்பற்றிய மொலைப் போனாகும். அது வழக்கு **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் முன்னிலையில் போலிசார் தயார் செய்த வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னிடம் காட்டப்படும் கையெழுத்தாகும். அது **அ.சா.ஆ.4** ஆகும். அதேபோன்று என்னிடம் காட்டப்படும் 26.03.2018 தேதிய அத்தாட்சியில் உள்ள இரண்டாவது

கையெழுத்து என்னுடைய கையெழுத்தாகும். அது **அ.சா.ஆ.5.** என்னுடன் சேர்ந்த லோகநாதன் என்பவர் கையெழுத்து போட்டிருந்தார். ஒப்புதல் வாக்கு மூலம் அளித்த சுதாகரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(குறுக்கு விசாரணை இல்லை).

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 19.04.2023 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பிரசாந்த் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

அ.சா.6

---

முதல் விசாரணை

நான் கூடலூரில் கோட்டை கருப்பசாமி கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.03.2018ம் தேதி காலை 9.00 மணிக்கு நானும் எனது நண்பர் சரத்குமாரும் கூடலூர் ஒட்டான்குளத்தில் காலை கடனை கழிப்பதற்காக சென்றிருந்தோம். போகும் வழியில் காவக்குச்சு அருகில் நின்றிருந்தபோது கூடலூர் காவல்நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர் மற்றும் போலிசார் அங்கு வந்தார்கள். அப்போது ஒரு நபரை கூப்பிட்டு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். நாங்களும் சென்று அதை பார்த்தோம். அப்போது மேற்படி நபரின் பெயர் பாண்டியராஜன் என்றும், கடந்த 3 வருடங்களாக சாமி ஸ்போர்ட்ஸ் சென்டரில் வேலை செய்து வந்ததாகவும், அப்போது அவரும் சாமியின் சித்தப்பா மருமகள் முத்துமாரியுடன் கள்ளத்தொடர்பில் இருந்ததாகவும், தற்போது இந்த விபரம் சாமியின் மனைவி சுகந்திக்கு இந்த விசயம் தெரிந்து அவர்கள் பயந்து கொண்டிருந்ததாகவும், பின்னர் ஒரு நாள் சுதாகர் என்பவர் கடைக்கு செல்போனில் ஓனரிடம் செல்போனை கொடு என்று கோவமாக பேசியபோது சுகந்தியிடம் நான் போய் போனைக்கொடுத்தாகவும், அப்போது அவர்கள் இருவருக்கும் தொடர்பு ஏற்பட்டதாகவும், இதை நான் வெளியில் சொல்லக்கூடாது என்றும், நான் சுதாகரிடம் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொன்னபோது நீ என்ன யோக்கியமா முத்துமாரியிடம் தொடர்பு வைத்துள்ளாய் என்றும், முத்துமாரியின் கணவர் தென்னரசுவிடம் சொல்லிவிடுவதாக என்னை மிரட்டி விட்டதால் நான் வெளியில் சுதாகருடன் சுகந்தி வைத்திருந்த தொடர்பை சொல்லவில்லை என்றும், சுகந்தியின் கணவர் சாமிக்கு எதோ இதய கோளாறு இருப்பதாகவும், என்ன மாத்திரை வாங்கி கொடுக்கிறீர்கள் என்று கேட்டு அதிகமாக மாத்திரையை கொடுக்க சொன்னதாகவும், விநாயகா மெடிக்கல்ஸ் சென்று நான் வாங்கிக் கொடுத்ததாகவும், நான் தினமும் மாத்திரை வாங்கி சாமியின் மனைவி

சுகந்தியிடம் கொடுத்ததாகவும் அவர் அதிக டோஸ் மாத்திரையை சாமிக்கு கொடுத்தாகவும் போலிசிடம் பாண்டியராஜன் சொன்னார். இடையில் சாமிக்கு காதிலும் வாயிலும் ரத்தம் வந்ததால் நான் வாங்கிக் கொடுத்த மாத்திரையை சுகந்தி அதிகமாக சாமிக்கு கொடுத்ததாக தான் தெரிந்து கொண்டதாக பாண்டியராஜன் போலிசாரிடம சொன்னார். சிகிச்சைக்காக சாமி கோயம்புத்தூரில் மருத்துவமனைக்கு சென்றதாக சொன்னார். சாமி அதிக டோஸ் கொடுத்து சாகவில்லை என்பதால் கூலி படைக்கு பணம் கொடுத்து கொன்று விடலாம் என்று பாண்டியராஜனிடம் சொன்னதாகவும் 3 லட்சம் தொகை பேசி 10,000 ரூபாய் முன்பணம் கொடுத்தாகவும் போலிசாரிடம் தெரிவித்தார். சாமி தன்மீது சந்தேகப்பட ஆரம்பித்ததும் பாண்டியராஜன் ஒதுங்கிக் கொண்டதாகவும் போலிசார் விசாரணையில் சுகந்தி சுதாகர் பேசிய செல்போன் பதிவுகளையும் வீடியோ மற்றும் ஆடியோ கால்களையும் போலிசாரிடம் போட்டுக் காண்பித்தார். போலிசார் என் முன்னிலையில் பாண்டியராஜன் சொன்னதை எழுதி பதிவு செய்து கொண்டார்கள். என்னுடன் நண்பர் சரத்குமார் என்பவரும் போலிசார் பதிவு செய்த விபரங்களில் கையெழுத்து போட்டோம். என் முன்னிலையில் போலிசார் சுகந்தியின் Samsung Galaxy செல்போனை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் 26.03.2018 தேதிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து. அது **அ.சா.ஆ.6**. 26.03.2018ம் தேதி ஆய்வாளர் தயார் செய்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து. என்னிடம் காட்டப்படும் Samsung Galaxy செல்போன் என் முன்னிலையில் போலிசார் பாண்டியராஜனிடமிருந்து கைப்பற்றிய செல்போனாகும். அது அரசு தரப்பில் ஏற்கனவே சா.பொ.3 ஆக அ.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பாண்டியராஜனை எனக்குஅடையாளம் தெரியும். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(குறுக்கு விசாரணை இல்லை).

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 19.04.2023 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சரத்குமார் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

அ.சா.7

---

முதல் விசாரணை

நான் கூடலூரில் எல்.எப்.ரோடில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.03.2018ம் தேதி காலை 9.00 மணியளவில் ஒட்டான்குளத்திற்கு நானும் எனது நண்பர் பிரசாந்தும் காலை கடனை கழிப்பதற்காக சென்றோம். போகும் வழியில் காவக்குச்சு அருகில் கூடலூர் காவல்துறையினர் பாண்டியராஜன் என்பவரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது பிரசாந்தும் என்ன விசாரணை செய்கிறார்கள் என்று பார்த்தோம். அப்போது பாண்டியராஜன் காவல்துறையிடம் அவருடைய பெயர் விலாசம் போன்றவைகளை சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் சாமி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் வேலை செய்ததாகவும் சொன்னார். அப்போது அங்கு முத்துமாரிக்கும் பாண்டியராஜனுக்கும் கள்ளத்தொடர்பு இருந்தாகவும், அவர்கள் இரண்டு பேர்களும் ஒன்றாக இருந்ததை கடை ஓனர் சுகந்தி நேரில் பார்த்துவிட்டதாகவும், அப்போது கண்டித்ததாகவும், அப்போது இனிமேல் நாங்கள் இந்த தவறை பன்னமாட்டோம் என்று சுகந்தியிடம் சொன்னதாகவும், அதன்பிறகு போலிஸ் சுதாகர் என்பவர் ஆர்டர் எடுப்பதற்காக கடைக்கு வந்ததாகவும், கடை உரிமையாளர் சுகந்தியிடம் போன் நம்பர் வாங்கிவிட்டதாகவும், அதன்பிறகு சுகந்தியும் போலிஸ் சுதாகரும் அடிக்கடி போனில் தொடர்பு கொண்டு பேசியதாகவும், அது பாண்டியராஜனுக்கு தெரிந்து விட்டதாகவும், அப்போது பாண்டியராஜன் சுகந்தியைப் பார்த்து உங்கள் கணவர் சாமி ஏற்கனவே இருதய நோயாளி இதுபோல் எந்த தவறும் செய்யாதீர்கள் என்ற சொன்னதாகவும், அதற்கு சுகந்தி பாண்டியராஜனைப் பார்த்து நீ என்ன யோக்கியமா நீ மட்டும் தப்பு பண்ணலையா என்று மிரட்டினார். இதுபற்றி நீ வெளியே சொன்னால்நீ முத்துமாரியுடன் கள்ளத்தொடர்பில் இருந்ததை அவருடைய கணவர் தென்னரசுவிடம் சொல்லிவிடுவேன் என்று மிரட்டினார். அதனால் இரண்டு பேருமே பயந்து கொண்டு வெளியில் சொல்லாமல் இருந்தாகவும், அதன்பிறகு சாமி இருதய நோயாளி என்பதை

தெரிந்துகொண்டு பாண்டியராஜனை வைத்து அதிக டோஸ் மாத்திரைகளை வாங்கி சுகந்தியிடம் கொடுத்தாகவும், அதை சுகந்தி அவருடைய கணவர் சாமிக்கு கொடுத்தாகவும், அதன்பிறகு சுகந்தியின் கணவர் சாமி அதிக டோஸ் சாப்பிட்டதால் மூக்கிலும் வாயிலும் ரத்தம் வந்ததால் கோயம்புத்துார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அதன்பிறகு சரியாகி திரும்பி வந்தபிறகு மறுபடியும் அதேபோல் அதிக டோஸ் உள்ள மாத்திரைகளை மீண்டும் கொடுத்தாகவும், மீண்டும் மூக்கிலும் வாயிலும் ரத்தம் வந்ததால் மறுபடியும் மதுரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், மீண்டும் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு திரும்பியவுடன் சுகாதரும் சுகந்தியும் அவர் மாத்திரையைப் போட்டும் சாகவில்லை என்றும் அதனால் ஆட்களை வைத்து கொலை செய்துவிடுவோம் என முடிவு எடுத்தார்கள். அதற்காக பாண்டியராஜன் மூலமாக 3 லட்ச ரூபாய் பேசி அதற்கு 10,000 ரூபாய் அட்வான்சாக கொடுத்து, அதன்பிறகு எப்படி ஆட்களை வைத்து கொலை செய்வது என்று கேட்டதற்கு கடையை அடைத்துவிட்டு வீட்டுக்கு போகும்போது அவரை கொலை செய்து விடுவதாக பேசியுள்ளார்கள் என்றும், மேற்படி விசயம் சாமிக்கு தெரிந்து ஆரம்பத்தில் பாண்டியராஜனையும் அவரின் மனைவி சுகந்தியையும் தவறாக நினைத்துள்ளார். அதன்பிறகு பாண்டியராஜன் தலைமறைவாகி விட்டதாகவும், அப்போது பாண்டியராஜனை போலிசார் கைது செய்ததாகவும், அப்போது தான் நானும் பிரசாந்தும் சென்று பார்த்தோம். பாண்டியராஜன் சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நானும் பிரசாந்தும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் 26.08.2018 தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து அது **அ.சா.ஆ.8**. என்னிடம் காட்டப்படும் 26.03.2018 தேதிய அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து அது அ.சா.ஆ.9. எங்கள் முன்னிலையில் போலிசார் Samsung செல்போனை கைப்பற்றினபர்கள். அது அரசு தரப்பில் ஏற்கனவே சா.பொ.3 ஆக அ.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பாண்டியராஜனை எனக்குஅடையாளம் தெரியும்.

இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 19.04.2023 SC.113/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வைரமுத்து | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

அ.சா.8

---

முதல் விசாரணை

நான் கம்பம் தாத்தப்பன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.03.2018ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நான் டைல்ஸ் பதிக்கும் தொழில் செய்து வருகிறேன். அப்போது நான் மதியம் சாப்பிடுவதற்காக நானும் பிரதாப்பும் சென்று கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் செல்லும் வழியில் கூடலூர் காவல் ஆய்வாளர் மணிவண்ணன் என்பவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். அப்போது சுதாகர் என்பவரிடம் பணம் வாங்கிக் கொண்டு நீ சாமியைக் கொலை செய்வதற்கு பணம் வாங்கினாயா என்று விசாரித்தபோது அவர் தாமாகவே முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். குள்ளப்பகவுண்டன்பட்டியைச் சேர்ந்த மணிவண்ணன் காவல் ஆய்வாளரிடம் கம்பம் வடக்கு காவல்நிலையத்திற்கு அவர் மீதுள்ள வழக்கு சம்மந்தமாக செல்லும்போது போலிஸ் சுதாகரை தெரியும் என்றும், அதன் மூலம் அவர் பழக்கம் என்றும், சுதாகர் சாமி என்பவரின் மனைவியுடன் உள் ளதொடர்பு காரணமாக சாமியை கொலை செய்ய வேண்டும் என்றுற எண்ணத்தில் அதிக டோஸ் உள்ள மாத்திரைகளை கொத்ததாகவும், அதில் அவர் தப்பித்து விட்டடதால் நான் சாமியை கொலை செய்ய வேண்டும் என்றும், அதற்கு 3 லட்ச ரூபாய் சுதாகர் பணம் கொடுப்பதாக பேசியதாகவும், முன்பணமாக ரூ.10,000ம் கொடுத்ததாகவும், அதில் உள்ள தொகையில் 2700 ரூபாய் செலவழித்து மீதி 7300 ரூபாயை வைத்துள்ளதாகவும் சொல்லியிருந்தார். அதை போலிசார் அவர் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து. அது **அ.சா.ஆ.10**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து. அது **அ.சா.ஆ.11**. என் முன்னிலையில் போலிசார் கைப்பற்றிய Itel A40 செல்போன் ஆகும். அது **அ.சா.ஆ.12**. என்னுடன் சேர்ந்து பிரதாப் என்பவரும்

ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் கையெழுத்து போட்டுள்ளார். போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மணிவண்ணன் என்பவரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்.